| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| மாவட்டம் : | **திண்டுக்கல்** | காலம் : | **22/06/2024** | முதல் | **26/06/2024** |
| அறிக்கை எண் : | **050/ 2024** | வெளியீட்டு நாள் : | **21/06/2024** | | |

**திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை (16.06.2024 முதல் 20.06.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 26-06-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/06 | 17/06 | 18/06 | 19/06 | 20/06 | **தேதி** | **நாள்-1** 22/06 | **நாள்-2** 23/06 | **நாள்-3** 24/06 | **நாள்-4** 25/06 | **நாள்-5** 26/06 |
| 0.0 | 0.4 | 3.1 | 7.8 | 2.6 | மழை (மி.மீ) | 10 | 35 | 36 | 36 | 12 |
| 40 | 39 | 39 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 36 | 34 | 33 | 32 |
| 27 | 27 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 22 | 20 | 20 | 20 |
| 5 | 4 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 58 | 65 | 86 | 72 | 70 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 90 | 90 | 80 | 80 |
| 58 | 51 | 80 | 72 | 52 | | 60 | 60 | 60 | 60 | 70 |
| 18 | 9 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 10 | 10 | 12 | 10 |
| வட கிழக்கு | தெற்கு | வட மேற்கு | தெற்கு | மேற்கு | காற்றின் திசை | **மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** |

**குறுஞ்செய்தி :**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 22, 23, 26 தேதி மிதமான மழையும் மற்றும் 24, 25 தேதி சற்றே கன மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 12 கி.மீ வேகத்தில், மேற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(21ஜூன்-04 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக இயல்பானது முதல் முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

28-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 04-7-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 23, 24, 25 தேதி கன மழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரி செய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**விவசாயம் :**

கடந்த சில நாட்களாக ஓரளவு மழைப் பொழிவு பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம்.

மேலும் விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மருந்து தெளிக்கும் வேலைகளை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : முருங்கை, வெங்காயம், கால்நடை.**

**முருங்கை:**

முருங்கைக்காய் பயிரைத் தாக்கும் இலைப்புழு பரவலாக தென்படுகின்றது. இதன் புழுக்கள் இலைப் பச்சையத்தை சுரண்டித் திண்பதால் இலைகள் சல்லடை போன்று காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த மரத்தை சுற்றி உழவுசெய்து மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை வெளிகொணர்ந்து அழிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பூ மொக்குகள் மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு ஒரு விளக்குப்பொறி வீதம் அமைக்க வேண்டும். மேலும் 10 லிட்டர் தண்ணீருக்கு 35 கிராம் என்ற அளவில் பிப்ரோனில் மருந்தினை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். காய்களை பறித்த பின்பு மருந்து தெளிக்கவும் அல்லது கண்டிப்பாக மருந்து தெளித்து 10 நாட்கள் கழித்து அறுவடை செய்யவும்.

**வெங்காயம்:**

வெங்காய பயிரில் போட்ரிடிஸ் இலைக்கருகல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியானது இலைப்பரப்பில் நூற்றுக்கும் அதிகமான வெள்ளை நிறப்புள்ளிகள் காணப்படும்.

இந்த நோய் வேகமாகப் பரவி, செடியின் அனைத்து பகுதியையும் மடியச் செய்யும். மிதமான தாக்குதல் விளைச்சலைப் பாதிக்காது. ஆனால் அதிக தாக்குதல் ஏற்பட்டால் விளைச்சலை வெகுவாகக் குறைக்கும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 15கிராம் புரோப்பிநெப் 70 சதம் உடன் 10மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் மாடுகளுக்கு தினமும்; 2 முதல் 3 கிராம் வரை இட்லிக்குப் போடப்படும் சோடா உப்பும், 15 முதல் 20 கிராம் வரை சமையலுக்கு உபயோகிக்கும் உப்பும் தீவனத்துடன் சேர்த்து அளித்து வந்தால், பாலில் எஸ்.என்.எப். என்ற கொழுப்பற்ற திடப்பொருட்களின் அளவு அதிகரிக்கும்.

.